12.03.2026

O.S.No.295/2015

பி.வா.சா.1.திரு.அருண்குமார், த.பெ. லேட்.கண்ணன்.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

6. 20.05.2015ம் தேதி எனது தகப்பனார் வெள்ளையன்பட்டியை சேர்ந்து அய்யாவு மகன் கணேசன் என்பவரிடம் வாதிக்கு தெரியாமல் தாவா சொத்தின் அசல் ஆவணத்தை திருடி சென்று கடனாக ரூ. 100000/- வாங்கியுள்ளாரா என்றால் வாங்கவில்லை. எனது தகப்பனார் கடன் வாங்கிய விவரம் எனக்கு தெரியும் என்றாலும் அது சம்மந்தமாக வாதி மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுத்த புகாரின் அடிப்படையில் ஒத்தகடை காவல் நிலையத்தில் குற்ற எண்.290/2015 என்ற எண்ணில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் வழக்கு பதிவு செய்யப்பட்டது உண்மைதான்.

7. எனது தந்தைக்கு வாதி வாய்க்கரால் தாவா சொத்தை விற்பனை செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஈடுகடன் ஆவணத்தில் நான் தரப்பினரோ சாட்சியோ இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் சமஸ்தமம் என்பது எவை எவை என்று குறிப்பிட்டு சொல்லபடவில்லை என்றால் சரிதான். ரூ.40000/- தாவா சொத்திற்காக வாதி பெற்றுக் கொண்டார் என்பது சம்மந்தமாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

8. பி.வா.சா.ஆ.1 ஈடுகடன் ஆவணத்தில் ரூ.40000/- வாதி பெற்றுக் கொண்டதற்கான குறிப்பு எதுவும் எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. உண்மையில் தாவா சொத்தை பொறுத்து வாதி என்னிடமோ என்

தகப்பனாரிடமோ ரூ. 40000/- பெற்றுக் கொள்ளவில்லை என்பதால்தான் அது சம்மந்தமான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. வாதி பி.வா.சா.ஆ.1 ஈடுகடன் ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்றாலும் ரூ.40000/- பெறவில்லை என்றாலும் பி.வா.சா.ஆ.1 ஈடுகடன் ஆவணம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

9. பொதுவாக கிரையம் வாங்கும்போது கிரையம் ஆவணம் ஏற்படுத்தப்பட்டு சட்டப்படி பதிவு செய்தால் மட்டுமே செல்லக்கூடியது என்றால் ஆமாம். வாதி வாய்ககரால் கிரையத்தை ஒப்புக் கொண்டு வீட்டு வரி ரசீதை மாற்றுவதற்கு ஆட்சேபனை இல்லா கடிதம் எழுதிக் கொடுத்துள்ளார் என்பது சம்மந்தமாக அந்த கடிதத்தின் நகலோ அசலோ இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். ஆட்சேபனை இல்லா கடிதம் வாதியின் சம்மதம் இல்லாமல் எனது தகப்பனரால் போலியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றாலும் எனவே மேற்படி ஆவணம் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. பி.வ.சா.ஆ.6 ஆவணம் வாதியையோ இந்த வழக்கையோ கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

10. வாதி எப்போதெல்லாம் எனது தகப்பனாரை சந்தித்து வாய்க்கரலாக கிரையம் எழுதிக் கொடுப்பதாக சொன்னார் என்று குறிப்பிட்டு எந்த தேதியில் எந்த இடத்தில் யார் யார் முன்னிலையில் சொன்னார் என்று எதிர்வழக்குரையிலோ நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து குறித்து கிரையம் எழுதிக் கொடுக்காமல் வீண் கால தாமதம் செய்துவந்தார் என்பது சம்மந்தமாக கடிதமோ அறிவிப்போ வாதிக்கு அனுப்பப்பட்டதா என்றால் வழக்கறிஞர் வைத்து

நீதிமன்றம் மூலம் அனுப்பிவிட்டோம். நீதிமன்ற மூலம் அனுப்பிவிட்டோம் என்று எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

11. தாவா சொத்தில் 2002 வருடம் முதல் குடியிருந்து வருகிறேன். பி.வா.சா.ஆ.4 அறிவிப்பில் கதவு எண்.2/49 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் கதவு எண்.2/37 என்றாலும் 2/49 என பொய்யாக அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. கதவு எண்.2/47 ஆகும்.

12. தாவா சொத்து சர்வே எண் புதியது 121/3, பழையது 47/1Bக்கு கட்டுப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தின் உண்மையான சர்வே எண்ணை மறைத்து வாதியை மோசடி செய்யவேண்டுமென்ற எண்ணத்தில் நாங்கள் அனுப்பிய பி.வா.சா.ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பில் புதிய சர்வே எண்.46/1 எனவும் பழைய சர்வே எண்.46 எனவும் குறிப்பிட்டு அனுப்பியுள்ளோம் என்றால் சரியல்ல.

13. நிரூபண வாக்குமூலம் பத்தி 20Aல் மண் சுவர் இடிந்து விட்டதால் தற்போது சுமார் 5 லட்சம் மதிப்பில் வீடு கட்டி குடியிருந்து வருகிறோம் என குறிப்பிடப்பட்டுள்ளது சம்மந்தமாக ரூ.5 லட்சம் செலவு செய்தது சம்மந்தமாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளமோ என்றால் இல்லை. தாவா சொத்து தற்போது என்ன நிலையில் உள்ளது என்பதை காண்பிக்க புகைப்படம் எதுவும் தாக்கல் செய்யதுள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். நான் சொல்வது போல் புகைப்படம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறோம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.8 குடும்ப அட்டை, பி.வா.சா.ஆ.9 ஆதார் அட்டை பெறுவதற்கு வீட்டின் உரிமையாளராக இருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை என்றால் சரிதான்.

14. வாதி தாவா சொத்து குறித்து எந்த ஒரு ஆவணமும் எழுதிக் கொடுக்கவில்லை என்றாலும் எந்த ஒரு தொகையும் பெற வில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. நாங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வாதியிடம் இருந்து தாவா சொத்தை அபகரிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் உற்பத்தி செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி எங்களிடம் எந்த ஒரு தொகையும் பெறவில்லை என்ற நிலையிலும், பி.வா.சா.ஆ.1 ஆவணம் வாதி எழுதிக் கொடுக்கவில்லை என்ற நிலையிலும், பி.வா.சா.ஆ.1 அடமான ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வாதி செலுத்தினால் தாவா சொத்தின் அனுபவத்தை வாதி வசம் ஒப்படைக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக இல்லை. வாதியின் வழக்கு அனுமதிக்க வேண்டுமென்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.